

Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

வர்தந்தி
சிறப்பு இதழ்

ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் ஸ்ரீசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ விதுசேகரபாரதீ மஹாஸ்வாமிகளின் 33ஆவது வர்தந்தி மஹோற்ஸவம்

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஶ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஶ்ரீஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

தனக்கு நல்லதெது என்பதைத் தெரிந்துகொள்ள மனிதன் எப்பொழுதும் ஆவலுடன் இருக்கவேண்டும். அவனுக்கு ச்ரேயோ மார்க்கத்தை எடுத்துக்கூற சாஸ்த்ரங்கள், இதிஹாஸ புராணங்கள் எல்லாம் இருக்கின்றன. இக்காலத்தில் அவற்றைத் தானாகவே படித்துத் தெரிந்துகொள்வது அவ்வளவு எளிதல்ல. நேரமும் கிடைப்பதில்லை. ஆகையால் பெரியோர்களிடமிருந்து கொஞ்சம்கொஞ்சமாக சாஸ்த்ரத்திலுள்ள ஸூக்ஷ்ம விஷயங்களைத் தெரிந்துகொள்வதுதான் நல்லது. தீவ்ரமான கடவுள் நம்பிக்கை இருந்தால் விரைவில் கடவுளே அவனுக்கு ஞான குருவாக வந்து ச்ரேயோ மார்க்கத்தை அருளுவார். அப்பொழுது அவன் உலகத்தை ஒரு கனவுபோல் உணர ஆரம்பித்துவிடுவான். சுர்மாக்கள், அதன் பலன்கள், அவற்றை அனுபவிப்பதற்கான புனர்ஜன்மங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு விடுவான். குரு மூலமாக ஸூக்ஷ்மமான வேதாந்த விஷயங்களை படிப்படியாக அவனால் அனுபவத்திற்குக் கொண்டுவர முடியும். ஆனால், அதுபோன்ற ஜிஞாஸு (அறிந்துகொள்ள ஆவலுள்ளவன்) முதலில் தன்னை குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரமாக்கிக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஸூர்ய கிரணத்தால் நிஜமான தாமரை மொட்டுத்தான் விகஸிக்கும். கட்டை அல்லது கல்லாலான தாமரை மொட்டல்ல. அதேபோல் தீவிரமான குருபக்தியால் குருஸேவை செய்துவந்து குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரமானவனில் தான் ஆத்மபோதம் உதயமாகும். அனுபவத்திற்கும் வரும்.

यद्यप्युदयने भानोर्यथा पद्मं प्रकाशते | न काशन्ते तथा पद्माः काष्ठपाषाणमृण्मयाः ||
யத்³யப்யுத³யனே பா⁴னோர்யதா² பத்³மம்' ப்ரகாஶதே |
ந காஶந்தே ததா² பத்³மா: காஷ்ட²பாஷாணம்ரு'ண்மயா: ||

प्रकाशको रविर्यद्वत्पद्ममेव विकासयेत् | गुरुस्तथा बोधकः सच्छिष्यमेव प्रबोधयेत् ||
ப்ரகாஶகோ ரவிர்யத்³வத்பத்³மமேவ விகாஸயேத் |
கு³ருஸ்ததா² போ³த⁴க: ஸச்சி²ஷ்யமேவ ப்ரபோ³த⁴யேத் ||

இதை நன்றாகப் புரிந்துகொண்டு குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரராக வேண்டுமென்று எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.
நன்றி : அம்மன் தரிசனம்.

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

‖ श्रीदक्षिणामूर्तिस्तोत्रम् ‖
‖ ஸ்ரீ த³க்ஷிணாமூர்தி ஸ்தோத்ரம் ‖
ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யார் அருளியது.

[ஆசார்யாள் அருளிய தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரங்கள் மூன்று. (1) தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் (2) தக்ஷிணா மூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்திரம் (3) தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம். இவைகளில் முதலாவதான தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் 19 சுலோகங்கள் கொண்டது ஆலமரத்தடியில் தெற்கு முகமாக அமர்ந்து சிந்முத்ரையாலும் மௌனத்தாலும் தத்வ உபதேசம் செய்யும் ஸ்ரீ ஆதிகுருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் ஸ்வரூபம் இதில் நன்கு வர்ணிக்கப்படுகிறது. அர்த்தானுஸந்தானத்துடன் இந்த ஸ்துதியைப் பாராயணம் செய்வதால் இவ்வுலகில் பொருள், ஆயுள் முதலானவற்றைப் பெறுவான். அபஸ்மாரம் முதலான ரோகங்கள் இவனிடம் நெருங்காது. கடைசியில் தத்வ ஞானமும் ஏற்படும்]

उपासकानां यदुपासनीयमुपात्तवासं वटशाखिमूले ।
तद्धाम दाक्षिण्यजुषा स्वमूर्त्या जागर्तु चित्ते मम बोधरूपम् ॥१॥
உபாஸகானாம்' யது³பாஸனீயம் உபாத்த வாஸம்' வடஶாகி² மூலே ।
தத்³தா⁴ம தா³க்ஷிண்ய ஜுஷா ஸ்வமூர்த்யா ஜாக³ர்து சித்தே மம போ³த⁴ ரூபம் ॥1॥

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

उपासकानां {உபாஸகானாம்’} = உபாஸகர்களுக்கு; यत् {யத்} = எது; उपासनीयं {உபாஸனீயம்’} = உபாஸிக்கத் தகுந்ததோ; दाक्षिण्यजुषा {தா^{3}க்ஷிண்யஜுஷா} = எது அனுகூலமான தன்மைவாய்ந்த; स्वमूर्त्या {ஸ்வமூர்த்யா} = தன்னுடைய உருவத்துடன் (தக்ஷிணாமூர்த்தி ரூபத்துடன்); वटशाखिमूले {வடஶாகி^{2}மூலே} = ஆலமரத்தடியில்; उपात्तवासं {உபாத்தவாஸம்’} = வஸித்து வருகின்றதோ; बोधरूपं {போ^{3}த^{4}ரூபம்’} = எது ஞான ஸ்வரூபமாய் நிலைத்து நிற்கின்றதோ; तत् {தத்} = அந்த; धाम {தா^{4}ம} = ஒளி; मम {மம} = என்னுடைய; चित्ते {சித்தே} = மனதில்; जागर्तु {ஜாக^{3}ர்து} = மிளிரட்டும்.

பரம்பொருள் ஞானஸ்வரூபம். அது தேஜோமயமாய் விளங்குகிறது. உருவம், குணம், பெயர் முதலியவைகள் அற்றது. இவ்வாறு விளங்கும் நிர்குண ப்ரம்மத்தை தியானிப்பது மிகவும் கடினம். ஆதலால் அப்பரம் பொருளே பக்தர்கள்பால் பரிவுகாட்டி தத்துவத்தை விளக்குவதற்காக தக்ஷிணாமூர்த்தியின் உருவைத்தாங்கி ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கின்றது. அம்மூர்த்தி மிகுந்த தாக்ஷிண்யம் வாய்ந்தது. பக்தர்களின் எண்ணங்களையறிந்து அவர்களுடைய மனதிற்குகந்தவாறு செயலாற்ற வல்லது. இவ்வாறு சிறந்த குணகணங்களைப்பெற்று விளங்குவதால் உபாஸகர்கள் இதைச் சுலபமாக உபாஸிக்கலாம். இம் மூர்த்தி என் மனதில் எப்பொழுதும் பிரகாசிக்கட்டும்.

பகவானுடைய மூர்த்தியையும் குணங்களையும் இடைவிடாது மனதில் நினைப்பதுதான் உபாஸனம் என்பது. இதற்குத்தான் தியானம் என்றும் பெயர். இவ்வாறு நினைப்பவர்களுக்கு உபாஸகர்கள் என்று பெயர். பகவானுடைய பலவிதமான மூர்த்திகளில் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம் ஞானத்தை உபதேசிப்பதற்காக ஏற்பட்டது. ஆகையால் ஞானத்தை விரும்புபவர்கள் ஆலமரத்தடியில் தெற்கு முகமாக வீற்றிருக்கும் ஒளிமயமான ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி ஸ்வரூபத்தை தியானம் செய்கிறார்கள். பகவத் ஸ்வரூபம் மனதில் நிலைத்திருக்கவேண்டுமானால் அவருடைய அருள் வேண்டும். தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம் மனதில் நிலைத்திருக்க இந்த சுலோகத்தில் அவரை பிரார்த்திக்கிறார்.

இந்த தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் உபஜாதி என்ற விருத்தத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் இந்த்ரவஜ்ரா, உபேந்த்ரவஜ்ரா என்ற இரண்டு விருத்தங்கள் கலந்து ஒன்று சேர்ந்துள்ளன. நிர்குணமான பரம்பொருள் பக்தர் களைக்காக்கும் பொருட்டு ஸகுணமான ரூபத்தையெடுத்துக் கொண்டு தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபியாய்க் காட்சியளிக்கின்றது. இவ்விரண்டு ஸ்வரூபங்களையும் வர்ணிப்பதற்கேற்றதான விருத்தம் இங்கு அமைந்திருப்பது மிகவும் உசிதமானது. (1)

अद्राक्षमक्षीणदयानिधानमाचार्यमाद्यं वटमूलभागे |
मौनेन मन्दस्मितभूषितेन महर्षिलोकस्य तमो नुदन्तम् ||२||
அத்^{3}ராக்ஷமக்ஷீண த^{3}யா நிதா^{4}னம் ஆசார்யமாத்^{3}யம்’ வடமூல பா^{4}கே^{3} |
மௌனேன மந்த^{3}ஸ்மித பூ^{4}ஷிதேன மஹர்ஷி லோகஸ்ய தமோ நுத^{3}ந்தம் ||2||

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

अक्षीण {அக்ஷீண} = குறைவற்ற; दया {த³யா} = தயைக்கு; निधानं {நிதா⁴னம்'} = இருப்பிடமாயும்;वटमूलभागे {வடமூலபா⁴கே³} = ஆலமரத்தடியில்; मन्दस्मित {மந்த³ஸ்மித} = புன்முறுவலால்; भूषितेन {பூ⁴ஷிதேன} = அலங்கரிக்கப்பட்ட; मौनेन {மௌனேன} = மௌனத்தினால்; महर्षिलोकस्य {மஹர்ஷிலோகஸ்ய} = மாமுனிவர்கள் குழாத்தின்; तमः {தம:} = அக்ஞான இருளை; नुदन्तं {நுத³ந்தம்'} = நீக்குகின்றவருமா; आद्यं {ஆத்³யம்'} = முதலாவது; आचार्ये {ஆசார்யே} = ஆசிரியரான தக்ஷிணாமூர்த்தியை; अद्राक्षम् {அத்³ராக்ஷம்} = கண்டேன்.

தக்ஷிணாமூர்த்தியான பரமேஸ்வரன் கருணைக்கடல். அவருடைய கருணை குறைவற்றது. அவர் தன்னை அண்டும் மாமுனிவர்களிடம் இரக்கம் காட்டி ஆலமரத்தடியில் அமர்ந்து அவர்களின் அக்ஞானம் என்னும் இருளை நீக்குகின்றார். அவர்தான் முதலாவது குருமூர்த்தி. அவர் தம் சீடர்களான மாமுனிவர்களுக்கு ஞானத்தை உபதேசிக்கும் முறை ஒப்பற்றது. அவர் வாய்திறவாமல் மௌனத்தை அனுஷ்டிக்கின்றார். அவருடைய முகத்தில் புன்முறுவல் திகழ்கின்றது. இவற்றின் ஒளியாலேயே முனிவர்களின் உள்ளத்தில் குடிகொண்டுள்ள அக்ஞான இருள் நீங்கி விடுகிறது. அப்பொழுது அவர்கள் பரமேச்வரனுடைய உண்மையை உணர்கின்றனர்.

முதல் சுலோகத்தில் ஸ்ரீபகவத்பாதர் தக்ஷிணாமூர்த்தியான பரமேச்வரன் என் அகக்கண் முன் தோன்றவேண்டுமென வேண்டுகிறார். அவருடைய பக்தி பெருக்கால் கட்டுண்ட கருணாமூர்த்தியும் அவர்முன் அக்கணமே காட்சியளிக்கின்றார். இதையே பகவத்பாதர் अद्राक्षम् {அத்³ராக்ஷம்} (கண்டேன்) என்று கூறுகிறார்.

இதனால் பக்தர்கள் மனம் உவந்து குருமூர்த்தியை வழிபடுவராயின் தயாபரனான அவரும் அவர்கள் முன் தோன்றி அவர்களுக்குத் தத்துவத்தை உபதேசித்து அவர்களைக் காத்தருள்வார் என்று நன்கு விளங்குகின்றது.

विद्राविताशेषतमोगणेन मुद्राविशेषेण मुहुर्मुनीनाम् |
निरस्य मायां दयया विधत्ते देवो महांस्तत्वमसीति बोधम् ||3||
வித்³ராவிதாஶேஷ தமோ க³ணேன முத்³ரா விஶேஷேண முஹுர் முனீனாம் |
நிரஸ்ய மாயாம்' த³யயா வித⁴த்தே தே³வோ மஹான் தத்வமஸீதி போ³த⁴ம் ||3||

महान् देवः {மஹான் தே³வ:} = மஹாதேவர்; दयया {த³யயா} = இரக்கத்தால்; विद्रावित {வித்³ராவித} = துரத்தப்பட்ட; अशेष {அஶேஷ} = மீதமற்ற; तमोगणेन {தமோக³ணேன} = இருள் கூட்டத்தை உடைய; मुद्राविशेषेण {முத்³ராவிஶேஷேண} = சிறந்த ஞான முத்திரையால்; मुहः {முஹு:} = அடிக்கடி; मुनीनां {முனீனாம்'} = முனிவர்களுடைய; मायां {மாயாம்'} = மாயையை; निरस्य {நிரஸ்ய} = நீக்கி; तत्वमसि इति {தத்வமஸி இதி} = அதுதான் நீ என்ற; बोधं {போ³த⁴ம்'} = ஞானத்தை; विधत्ते {வித⁴த்தே} = அளிக்கின்றார்.

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

தக்ஷிணா மூர்த்தியே பெருமை வாய்ந்த பரம்பொருள். அவர் பக்தர்களிடம்

பரிவு காட்டும் தன்மை பெற்றவர். அவர்களது உள்ளங்களில் ஊன்றி நிற்கும் அஞ்ஞான மெனும் இருளை நீக்க அவர் சின்முத்திரையுடன் விளங்குகின்றார். கட்டை விரலையும் ஆள் காட்டி விரலையும் ஒன்றாகச் சேர்த்துக் காட்டும் அடையாளத்திற்குச் சின் முத்திரை என்று பெயர். இது ஜீவாத்மாவும் பரமாத் மாவும் ஒன்றே என்ற ஜீவப்ரம்மைக்யமெனும் தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறு இருப்பினும் மக்கள் இதை அறிவதில்லை. ஏனெனில் மாயை எனும் ஓர் இருள் உண்மையின் ஸ்வருபத்தை மறைத்து விடுகின்றது. ஆனால் தக்ஷிணாமூர்த்தியின் சின்முத்திரை மாயை எனும் திரையை விலக்கித் தத்துவமஸி என்ற ஞானத்தை உபதேசிக்கின்றது.

தத்துவமஸி என்பது உபநிஷத்துக்களில் கூறப்பட்ட ஓர் மஹா வாக்யம். இதில் தத் என்ற பதம் ஈச்வரனைக் குறிக்கின்றது. அவன் தான் இவ்வுலகைப் படைத்துக் காத்துக் கடைசியாகத் தனக்குள்ளேயே லயமடையச் செய்யும் ஆற்றல் பெற்றவன். ஞான ஸ்வரூபியும் அவனே. அவன் தான் அழிவற்றவனாயும் எங்கும் நிறைந்தவனாயும் விளங்குகின்றான். இரண்டாவதான த்வம் என்ற பதத்திற்கு ஜீவன் என்று பொருள். இந்த ஜீவன் அல்ப அறிவுள்ளவன். இவன் பலவிதமான

தோற்றங்களைப் பெறுகிறான். இவன் அஞ்ஞானமென்ற உபாதியையுடையவன். அதனால் தான் இவன் தான் சுகத்தை அடைவதாயும் துக்கத்தை அடைவதாயும் எண்ணுகின்றான். நன்கு பரிசோதித்து பார்க்கும் பொழுது ஜீவனும், ஈசுவரனும் ஒன்று தான் என்ற ஞானம் உண்டாகும். இந்த ஜீவனும் ஈஸ்வரனும் ஒன்றே என்ற உண்மையை அஸி என்ற பதம் எடுத்துக் காட்டுகின்றது. (3)

अपारकारुण्यसुधातरङ्गैरपाङ्गपातैरवलोकयन्तम् |
कठोरसंसारनिदाघतप्तान्मुनीनहं नौमि गुरुं गुरूणाम् ||४||
அபார காருண்ய ஸுதா4 தரங்கை3ரபாங்க3 பாதை ரவலோகயந்தம் |
கடோ2ர ஸம்’ஸார நிதா3க4 தப்தான் முனீனஹம்’ நௌமி கு3ரும்’ கு3ரூணாம் ||4||

अपारं {அபாரம்’} = எல்லையற்ற; कारुण्य {காருண்ய} = கருணையாகிய; सुधा {ஸுதா4} = அமுதத்தின்; तरङ्गै {தரங்கை3} = அலைகளையுடைய; अपाङ्गपातै: {அபாங்க3பாதை:} = கடைக்கண் பார்வைகளால்; कठोर {கடோ2ர} = கடுமையான; संसारनिदाघ {ஸம்’ஸாரநிதா3க4} = ஸம்ஸார மெனும் வெப்பத்தால்; तप्तान् {தப்தான்} = தாபத்தை அடைந்த; मुनीन् {முனீன்} = முனிவர்களை; अवलोकयन्तम् {அவலோகயந்தம்} = பார்க்கின்றவரும்; गुरूणां {கு3ரூணாம்’} = குருக்களுக்கெல்லாம்; गुरुं {கு3ரும்’} = குருவான தக்ஷிணாமூர்த்தியை; अहं {அஹம்’} = நான்; नौमि {நௌமி} = வணங்குகிறேன்.

தக்ஷிணாமூர்த்தியானவர் மிகுந்த இரக்கம் உள்ளவர். வாழ்க்கையின் இன்னல்களில் சிக்குண்டு தவிக்கும் மக்களின் துயரை நீக்குவதற்காக அவர் தம் கடைக்கண் பார்வைகளை அவர்கள் மீது செலுத்துகின்றார். அவைகளினின்று எல்லையற்ற அமுத மயமான ஒளிகள் அலை அலையாகக் கிளம்பித் துயர் படும் பக்தர்கள் பால் படிகின்றன. அதனால் அவர்களுடைய மூன்று வகையான தாபங்களும் நீங்கி விடுகின்றன. இவ்விதம் அவரது கடாக்ஷ வீக்ஷணத்திற்குப் பாத்திரமான மாமுனிவர்கள் ஆனந்தாம்ருத கடலில் ஆழ்ந்து மூழ்கி விடுகின்றனர். தக்ஷிணாமூர்த்தி தான் ஆதி குரு. அவரே ஜீவப்ரம்மைக்யத்தை உபதேசித்தவர். அவரிடமிருந்தே மற்ற ஆசார்யர்கள் தோன்றியுள்ளனர். ஆதலால் நான் அவரது திருவடிகளைப் பணிகின்றேன். (4)

ममाद्यदेवो वटमूलवासी कृपाविशेषात्कृतसंनिधानः |
ओंकाररूपामुपदिश्य विद्यां आविद्यकध्वान्तमपाकरोतु ||५||
மமாத்3ய தே3வோ வடமூல வாஸீ க்ரு’பா விஶேஷாத் க்ரு’த ஸந்நிதா4னః |
ஓங்கார ரூபாமுபதி3ஶ்ய வித்3யாம்’ ஆவித்3யக த்4வாந்தமபாகரோது ||5||

आद्यदेव: {ஆத்3யதே3வ:} = முழுமுதற்கடவுளான; वटमूलवासी {வடமூலவாஸீ} = ஆலமரத் சிறந்த தடியில் வஸிக்கும் தக்ஷிணாமூர்த்தி; कृपाविशेषात् {க்ரு’பாவிஶேஷாத்} = சிறந்த கருணையால்; कृतसंनिधान: {க்ரு’தஸம்’நிதா4ன:} =என்முன் தோன்றியவராய்; ओंकाररूपां {ஓங்காரரூபாம்’} = ஓம்கார ரூபமாகி; विद्यां {வித்3யாம்’} = பிரம்ம வித்யையை; उपदिश्य {உபதி3ஶ்ய} = கற்றுக்கொடுத்து; मम {மம}

= என்னுடைய; आविद्यकध्वान्तं {ஆவித்³யகத்⁴வாந்தம்’} = அஞ்ஞானத்தால் உண்டாகும் இருளை; अपाकरोतु {அபாகரோது} = நீக்கட்டும்.

தக்ஷிணாமூர்த்தி தான் ஆதியான பரம்பொருள். அவர் தென் திசையை நோக்கிய வண்ணம் அமர்ந்திருத்தலால் தக்ஷிணாமூர்த்தி யென்று அழைக்கப்படுகின்றார், தன்னை அண்டும் பக்தர்கள் அனைவருக்கும் ஆத்ம ஞானத்தைப் புகட்டி அவர்களைக் கடைத்தேற்றுவதற்காகவே அவர் ஆல மரத்தடியில் அமர்ந்துள்ளார். அவர் பக்தர்களிடம் கருணை காட்டும் வள்ளல், நினைத்த மாத்திரத்திலேயே அவர்களுடைய அகக்கண் முன் தோன்றி ஓம்காரமெனும் வித்யையை உபதேசித்து உள்ளத்துறையும் அஞ்ஞான மெனும் இருளை நீக்கி அவர்களை ஆட்கொள்ளும் ஆற்றல் பெற்றவர். இவ்வாறு பரம கருணாமூர்த்தியாய் விளங்கும் தக்ஷிணாமூர்த்தி என் முன் தோன்றி பிரணவ வித்யையை உபதேசித்து அஞ்ஞானத்தையும் அகற்ற வேண்டுமென பரமாசார்யார் வேண்டுகின்றார். (5)

कलाभिरिन्दोरिव कल्पिताङ्गं मुक्ताकलापैरिव बद्धमूर्तिम् |
आलोकये देशिकमप्रमेयमनाद्यविद्या तिमिरप्रभातम् ||६||
கலாபி⁴ரிந்தோ³ரிவ கல்பிதாங்க³ம்’ முக்தா கலாபைரிவ ப³த்³த⁴ மூர்த்திம் |
ஆலோகயே தே³ஶிக மப்ரமேயம் அநாத்³யவித்³யா திமிர ப்ரபா⁴தம் ||6||

इन्दो: {இந்தோ³:} = சந்திரனுடைய; कलाभि: {கலாபி⁴:} = கலைகளால்; कल्पित {கல்பித} = அமைக்கப்பட்ட; अङ्गं इव{அங்க³ம்’ இவ} = உறுப்புக்களையுடையவர் போலவும்; मुक्ताकलापै:{முக்தாகலாபை:} = நல் முத்துக்களின் வரிசைகளால்; बद्धमूर्तिं इव {ப³த்³த⁴மூர்திம்’ இவ} = கட்டப்பட்ட தேஹத்தையுடையவர்போலவும்; अप्रमेयम् {அப்ரமேயம்} = மதிப்பிற்கெட்டாதவராயும்; अनाद्यविद्या {அநாத்³யவித்³யா} = ஆதியற்ற அஞ்ஞானமாகிய; तिमिर {திமிர} = இருட்டிற்கு; प्रभातम् {ப்ரபா⁴தம்} = காலைவேளயாகவும் விளங்குகின்ற; देशिकं {தே³ஶிகம்’} = குருவை; आलोकये{ஆலோகயே} = காண்கின்றேன்.

தக்ஷிணாமூர்த்தியின் திருமேனி மிகவும் பொலிவு பெற்று விளங்குகின்றது. அவருடைய அங்கங்கள் சந்திரனுடைய கலைகளைக் கொண்டு அமைக்கப் - பட்டவை போல் அனைவரது உள்ளங்களையும் மகிழ்விக்கின்றன. அவரது உடல் கட்டழகு வாய்ந்தது. அது அழகிய நல்முத்துக்களால் ஆக்கப்பட்டது போல் லாவண்யத்துடன் பிரகாசிக்கின்றது. அவரே பரம்பொருளாகத் திகழ்வதால் அவரது ஸ்வரூபத்தை அறிவது மிகவும் அரிது. ஏனெனில் அவர் அளவு கடந்தவர். அவர் பரஞ்ஜ்யோதியாய் வீற்றிருப்பதால் அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே அஞ்ஞானம் என்ற இருள் நீங்கி ஆத்ம ஞானத்தைப் பெற்று அனைவரும் ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடைகின்றனர். ஆதலால் அவரை இருட்டை நீக்கும் காலை வேளை என்று பகவத்பாதர் உருவகப்படுத்திக் கூறுகின்றார். இவ்வாறு தோன்றும் பரம் பொருளை நான் காண்கின்றேன் என்று அவர் தன்னுடைய அனுபவத்தை எடுத்துக் காட்டுகின்றார். (6)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



स्वदक्षजानुस्थितवामपादं पादोदरालंकृतयोगपट्टम् |
अपस्मृतेराहितपादमङ्गे प्रणौमि देवं प्रणिधानवन्तम् ||७||
ஸ்வத³க்ஷ ஜானு ஸ்தி²த வாம பாத³ம்’ பாதோ³த³ராலங்க்ரு’த யோக³ பட்டம் |
அபஸ்ம்ரு’தே ராஹித பாத³ மங்கே³ ப்ரணௌமி தே³வம்’ ப்ரணிதா⁴னவந்தம் ||7||

स्वदक्षजानु {ஸ்வத³க்ஷஜானு} = தன்னுடைய வலது முழங்காலில்; स्थित {ஸ்தி²த} = வைக்கப்பட்ட; वामपादं {வாமபாத³ம்’} = இடது காலையுடையவராயும்; पादोदर {பாதோ³த³ர} = பாம்பினால்; अलंकृत {அலங்க்ரு’த} = அழகுபடுத்தப்பட்ட; योगपट्टं {யோக³பட்டம்’} = யோக பட்டத்தையுடையவராயும்; अपस्मृते: {அபஸ்ம்ரு’தே:} = அபஸ்மாரம் என்ற அஸுரனின்; अङ्गे {அங்கே³} = உடலில்; आहितपादं {ஆஹிதபாத³ம்’} = வைக்கப்பட்ட காலையுடையவராயும்; प्रणिधानवन्तं {ப்ரணிதா⁴னவந்தம்’} = மனதை ஒருநிலைப்படுத்திய வராயுமுள்ள; देवं {தே³வம்’} = கடவுளை; प्रणौमि {ப்ரணௌமி} = நன்கு வணங்குகிறேன்.

தக்ஷிணாமூர்த்தியானவர் தனது இடது காலை வலது காலின் மீது போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கின்றார். அவர் யோகாஸனத்தில் வீற்றிருக்கும் சமயம்

பாம்பு அவரது யோக பட்டமாக விளங்குகிறது. யோக பட்ட மென்பது முழங்காலையும் முதுகையும் வளைத்துக் கட்டும் ஆடை. இவ்வாறு தம் மனதை ஓர் நிலைப்படுத்திய ஞான ஒளியான பரம்பொருள் அபஸ்மாரம் என்னும் அஸுரனின் உடலில் பாதத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். அதாவது படுத்துக் கொண்டிருக்கும் அவன் எழுந்திருக்க முடியாதபடி காலால் அமிழ்த்திக் கொண்டிருக்கிறார். ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியின் அருள் நமக்கு இருந்தால் அபஸ்மாரம் முதலான ரோகங்கள் நம்மிடம் நெருங்காது என்பதை இது காட்டுகிறது. இவ்வாறு விளங்கும் பரமயோகியான தக்ஷிணா மூர்த்தியை நாம் வணங்க வேண்டும். (7)

तत्वार्थमन्तेवसतामृषीणां युवापि यः सन्नुपदेष्टुमीष्टे |
प्रणौमि तं प्राक्तनपुण्यजालैराचार्यमाश्चर्यगुणाधिवासम् ||८||
தத்வார்த்த² மந்தே வஸதாம் ரு’ஷீணாம்’ யுவாபி ய꞉ ஸன்னுபதே³ஷ்டு மீஷ்டே |
ப்ரணௌமி தம்’ ப்ராக்தன புண்ய ஜாலை: ஆசார்ய மாஶ்சர்ய கு³ணாதி⁴
வாஸம் ||8||

यः {ய:} = எந்த தக்ஷிணாமூர்த்தி; युवा अपि सन् {யுவா அபி ஸன்} = இளைஞனாக இருப்பினும்; अन्ते वसताम् {அந்தே வஸதாம்} = தன் அருகாமையில் அமர்ந்திருக்கும் சீடர்களான; ऋषीणां {ரு’ஷீணாம்’} = (விருத்தர்களான) மாமுனிவர்கட்கு; तत्वार्थं {தத்வார்தே²} = ஆன்ம ஞானத்தை; उपदेष्टुं {உபதே³ஷ்டும்’} = கற்றுக்கொடுப்பதற்கு; ईष्टे {ஈஷ்டே} = வல்லமைபெற்று விளங்குகின்றாரோ; प्राक्तनपुण्यजालैः {ப்ராக்தனபுண்யஜாலை:} = முன்பிறவிகளில் செய்த நல்வினைகளின் பெருக்கால்; आचार्यं {ஆசார்யே} = எனது ஆசிரியராய் அமைந்தவரும்; आश्चर्यगुणाधिवासम् {ஆஶ்சர்யகு³ணாதி⁴வாஸம்} = வியப்பை உண்டாக்கும் குணங்களின் உறை - விடமான; तं {தம்’} = அந்த தக்ஷிணாமூர்த்தியை; प्रणौमि {ப்ரணௌமி} = வணங்குகிறேன்.

தக்ஷிணாமூர்த்தியானவர் சிறிய தோற்றத்தையுடையவராய் ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கிறார். அவர் சீரிய குணங்கள் படைத்தவர். அவருடைய குணங்கள் அனைவருக்கும் மிக்க வியப்பை அளிக்கின்றன. அவர் வாலிபனாக இருப்பினும் வயது முதிர்ந்த மாமுனிவர்கள் கூட ஆன்ம அறிவைப் பெற அவரையே நாடிச் செல்கின்றனர். அவ்வனைவருக்கும் அவர் உண்மைப் பொருளான ஜீவப்ரஹ்மைக்யத்தை வாய் திறவாமலேயே சின் முத்திரையால் விளக்கிக் காட்டுகின்றார். சிறுவன் பெரியோர்களுக்கு உபதேசிப்பதும், வாய் திறவாமல் மௌநியாகப் பாடம் சொல்வதும் எங்கும் காணாத அதிசயம், இதை தக்ஷிணாமூர்த்தியிடம் காணலாம்.

चितं बटतरोर्मूले वृद्धाः शिष्या गुरुर्युबा ।
गुरोस्तु मौनं व्याख्यानं शिष्यास्तु छिन्नसंशयाः ॥
சிதம்’ ப³டதரோர்மூலே வ்ரு’த்³தா⁴꞉ ஶிஷ்யா கு³ருர்யுபா³ |
கு³ரோஸ்து மௌனம்’ வ்யாக்²யானம்’ ஶிஷ்யாஸ்து சி²ன்னஸம்’ஶயா꞉ ||

அவரைக் குருவாகப் பெற அநேகபுண்ய கர்மாக்களைச் செய்திக்கு இருக்க வேண்டும். सतां सद्भिः संगः कथमपि पुण्येन भवति {ஸதாம்' ஸத்3பி4: ஸங்க3: கத2மபி புண்யேன ப4வதி} என்பது சான்றோர் வாக்கு. அதாவது நல்லவர்களுக்கு நன்மக்களின் சேர்க்கை ஏதோ புண்ய வசத்தால் தான் ஏற்படுகிறது. இங்கு பரமாசார்யர் தனக்குப் பூர்வ ஜன்மங்களில் செய்த நல்வினைகளின் பயனால் தான் இவ்வாறு சிறப்புடன் விளங்கும் ஆசிரியர் கிடைத்திருக்கிறார் எனக் கூறுகின்றார். இப்படிப்பட்ட தக்ஷிணாமூர்த்தியை நாம் அனுதினமும் வணங்க வேண்டும். (8)

एकेन मुद्रां परशुं करेण करेण चान्येन मृगं दधानः |
स्वजानुविन्यस्तकरः पुरस्तादाचार्यचूडामणिराविरस्तु ||९||
ஏகேன முத்3ராம்' பரஶும்' கரேண கரேண சான்யேன ம்ரு'க3ம்' த3தா4ன: |
ஸ்வஜானு வின்யஸ்த கர: புரஸ்தாத்3 ஆசார்ய சூடா3மணி ராவிரஸ்து ||9||

एकेन करेण {ஏகேன கரேண} = ஒரு கையினால், मुद्रां {முத்3ராம்'} = சின்முத்திரையையும்; अन्येन करेण {அன்யேன கரேண} = மற்றோரு கையினால்; परशुं {பரஶும்'} = கோடாரியையும்; अन्येन करेण {அன்யேன கரேண} = மற்றோருமோர் கையினால்; मृगं {ம்ரு'க3ம்'} = மானையும்; दधान: {த3தா4ன:} = தரித்துக் கொண்டிருக்கின்றவராயும்; स्वजानु {ஸ்வஜானு} = தன்னுடைய முழங்காலில்; विन्यस्तकर: {வின்யஸ்தகர:} = வைக்கப்பட்ட கையையுடைய வருமான; आचार्यचूडामणि: {ஆசார்யசூடா3மணி:} = ஆசார்யர்களுக்குள் சிறந்து விளங்கும் ரத்னமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி; पुरस्तात् {புரஸ்தாத்} = முன்னால்; आविरस्तु {ஆவிரஸ்து} = தோன்றட்டும்.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி தன்னை அண்டும் பக்தர்களுக்கு ஞானோபதேசம் செய்வதற்காகத் தன்னுடைய கைகளில் ஒன்றில் சின் முத்திரையை வைத்துக்கொண்டிருக்கிறார். கட்டை விரலையும் ஆள் காட்டி விரலையும் சேர்த்துக் காட்டும் அடையாளம் சின் முத்திரை எனப்படுகின்றது. இந்த சின்முத்திரை ஜீவனும் பிரம்மமும் ஒன்றுதான் என்பதைக் காட்டுகின்றது. இந்த ஞானத்தைப் பெற்றவன் பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டு பிரம்ம ஸாக்ஷாத்காரம் அடைகிறான், இதற்கு இடையூறாக இருப்பது அஞ்ஞானம். இதைப் போக்குவதற்கு அடையாளமாகத் தன் கையில் கோடாலியை வைத்துக்கொண்டிருக்கிறார். அடர்ந்த காட்டினுள் இருள் சூழ்ந்திருக்கும். செடி கொடி முதலியவற்றை வெட்டி எறிந்தால்தான் அங்கு வெளிச்சம் வரும். வெளிச்சம் வந்தவுடனே இருள் நீங்கும். அதுபோல் அஞ்ஞானமென்ற இருளையும் அதன் கார்யமான காமம் முதலியவற்றையும் அகற்றுவதன் நிமித்தமாக கோடாலி விளங்குகின்றது. ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி இவ்வாறு தன்னிடம் வரும் பக்தர்களைக் காக்கின்றார். காமம், க்ரோதம் முதலியவை மிருகங்களின் ஸ்வபாவருணங்கள். ஒரு கையில் மானை வைத்துக் கொண்டிருப்பது காமாதிகளை அடக்கி இருப்பதைக் காட்டுகிறது. அவர் அருள் இருந்தால் நம்மையும் காமாதிகள் துன்புறுத்தாது. அவர் யோகாஸனத்தில் அமர்ந்திருப்பதால் ஓர் கையை முழங்காலில் வைத்துக்கொண்டிருக்கிறார்.

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

எப்பொழுதும் அண்டியவர்களை காப்பதற்காக அவர் தியானத்தில் ஆழ்ந்துள்ளார். இவ்வாறான ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி என் முன் தோன்றட்டும். (9)

ஸத் ஸம்பிரதாயம் (உபாஸனா) இதழில் இதன் தொடர்ச்சியை பார்க்கவும்

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free Copies please mail us. Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்